

விருதுநகர் மாவட்டம் மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா தலைமையில் விருதுநகரில் காமராஜரின் 123 – வது பிறந்த நாளை விழாவை முன்னிட்டு மதுரை ரோட்டில் உள்ள காமராஜர் மணிமண்டபத்தில் உள்ள காமராஜர் சிலைக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர.ஆர்.சீனிவாசன், முன்னாள் சேர்மன் சுப்பாராஜா, நகர திமுக செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், நகர் மன்றத் தலைவர் எஸ்.ஆர்.எஸ்.மாதவன், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி. இராஜகுரு, அரசு போக்குவரத்துக் கழக பொதுச் செயலாளர் ராஜ செல்வம், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.பி.மதியழகன், நவநீதன், அண்ணாதுரை, சுதாகர், கழக நிர்வாகிகள் காசிராஜன், ஏ.எஸ்.கே.ரமேஷ்குமார், எல்.திருமாறன், அ.மரியராசு, கருணாநிதி, ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் முதல் முகாமினை கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் ஒத்தக்கடையில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்பி.மூர்த்தி பங்கேற்று துறை சார்ந்த அரங்குகளில் மனுக்கள் பதிவு செய்யப்பட்டு வருவதை பார்வையிட்டு பெறப்பட்ட மனுவுக்கு உடனடி தீர்வாக பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார் மற்றும் அதிகாரிகள், திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.



கல்விக்கண் திறந்த பெருந்தலைவர் தன் வாழ்நாள் முழுமைக்கும் எளிமையை கடைப்பிடித்து இந்த மண்ணை விட்டு மறைந்தாலும் நம் மனதில் தலைமுறை கடந்து வாழ்ந்து கொண்டிருக்கிற கர்மவீரர் காமராஜர் அவர்களின் 123 வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு கமுதியில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் உடன் கமுதி வடக்கு ஒன்றிய செயலாளர் வி.வாசுதேவன் மற்றும் ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் பங்கேற்றனர்.




இராமநாதபுரத்தில் நேற்று உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் துவக்கி வைத்தார் உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜித் சிங் காலோன், பார்வையிட்டு பொதுமக்களிடம் மனுக்கள் பெற்றார், உடன் இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு, மற்றும் இராமநாதபுரம் நகர்மன்றத் தலைவர் ஆர் கே கார்மேகம், நகர் மன்ற துணைத் தலைவர் பிரவீன் தங்கம், ஆகியோர் உள்ளனர்.



புதூர் ஊராட்சி ஒன்றியம், கருப்பூர் ஊராட்சி,அரசு உயர்நிலைப்பள்ளியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதத்திட்டத்தின் கீழ் ரூ.8.72 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமையலறை கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்கண்டேயன் திறந்து வைத்தார். மேலும் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.6லட்சம் மதிப்பீட்டில் சைக்கிள் நிறுத்தமிடம் கட்டுவதற்கும் மற்றும் மகாத்மா காந்தி ஊரக தேசிய உறுதி திட்டத்தின் கீழ் ரூ.20லட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்.உடன் புதூர் மேற்கு ஒன்றிய செயலாளர் மும்மூர்த்தி, புதூர் மத்திய ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன் உட்பட கழக நிர்வாகிகள், பள்ளி ஆசிரிய ஆசிரியைகள், மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.





கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில், மேலூர் தொகுதிக்குட்பட்ட கிழக்கு ஒன்றிய பகுதிகளில் கிராமம் கிராமமாக சென்று பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர், திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.



மதுரை மாநகர் மாவட்ட திமுக சார்பில் கர்மவீரர் காமராஜர் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை விளக்குத் தூணில் உள்ள அன்னாரது திருவுருவ வெண்கல சிலைக்கு மாநகர் மாவட்ட செயலாளர் கோ தளபதி எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாநில தணிக்கைக் குழு உறுப்பினர் வ. வேலுசாமி, உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பெ. குழந்தை வேலு, தலைமை செயற்குழு உறுப்பினர்மா. ஜெயராம், மாவட்டக் கழக நிர்வாகிகள் ஒச்சு பாலு , வக்கீல் ராகவன், இளைஞர் அணி சௌந்தர்ராஜன் , பகுதி செயலாளர் ஜீவன், பா.ரமேஷ் குமார், பொதுக்குழு உறுப்பினர்கள், பி.டி.மணிமாறன், ஆறுமுகம், முத்து கணேஷ், பகுதி செயலாளர் செல்லூர் அறிவு நிதி, சரவணன் அம்பலம் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வட்டச் செயலாளர்கள் கழக நிர்வாகிகள் கழகத்தினர் திரளானோர் கலந்து கொண்டனர்.





மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு திருமங்கலம் தொகுதியில் 1.50 லட்சம் பேருக்கு தொடர்ச்சியாக நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவின் ஒரு பகுதியாக கல்லுப்பட்டி ஒன்றியம் பெரியபூலாம்பட்டியில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் நாகராஜன் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், திரளான பயனாளிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகர் இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா திராவிட மாடல் ஆட்சியின் 4ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல். ஏ. சிறப்புரை ஆற்றினார். மேடையில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், முன்னாள் எம்எல்ஏ நகர் மன்றத் தலைவர் எஸ்.மாரியப்பன் கென்னடி, ஒன்றிய செயலாளர்கள் துரை.ராஜாமணி, எம்.அண்ணாதுரை, நகர் கழகச் செயலாளர் க.பொன்னுச்சாமி தலைமை கழகப் பேச்சாளர் கவிஞர் சிவ.முத்துவளவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.